©
GOVERNMENT OF TAMIL NADU
2013

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price : Rs. 2.40 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

**EXTRAORDINARY** PUBLISHED BY AUTHORITY

No. 45] CHENNAI, WEDNESDAY, FEBRUARY 20, 2013
Maasi 8, Nandhana, Thiruvalluvar Aandu–2044

## Part II—Section 1

**Notifications or Orders of specific character or of particular interest to the public issued by Secretariat Departments.**

### NOTIFICATIONS BY GOVERNMENT

**வருவாய்த் துறை**

*தலைமைச் செயலகம், 2013 பிப்ரவரி 20.*

**No. II(1)/REV/2(e)/2013.**

**[வறட்சி – தமிழகத்தில் சென்னையை தவிர்த்து ஏனைய 31 மாவட்டங்களை வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களாக அறிவித்தல் – காவேரி நதி நீரை கர்நாடகம் திறந்து விடாத நிலையில் டெல்டா மாவட்டங்களில் ஏற்பட்ட பயிர் பாதிப்பு அதனால் ஏற்பட்ட வறட்சி குறித்து காவேரி சிறப்பு கூடுதல் நிவாரணம் மற்றும் வறட்சி நிவாரணம் வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.]**

கீழ்க்கண்ட அரசாணை வெளியிடப்படுகிறது:—

*[அரசாணை (நிலை) எண் 48, வருவாய்த் [பே.மே.3(1)]த் துறை, நாள் 2013 பிப்ரவரி 13.]*

**படிக்கவும் :**

1. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செய்தி வெளியீடு எண் 4, நாள் 05–01–2013.
2. அரசாணை (பல்வகை) எண் 4, வருவாய்த் துறை, நாள் 05–01–2013.
3. அரசுக் கடிதம் (பல்வகை) எண் 16, வருவாய், நாள் 10–01–2013.
4. அரசாணை எண் 167, பொது (சிறப்பு பணி ஆ) துறை, நாள் 11–1–2013.
5. கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிர்வாக ஆணையர் நேர்முகக் கடித எண் இஇ. 2 (1) / 49984 /2012, நாள் 31–01–2013 (உயர்மட்டக் குழுவின் அறிக்கை உடன் இணைத்து அனுப்பப்பட்டது).
6. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் வெளியிட்ட அறிவிப்பு நாள் 08–02–2013.
7. கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிர்வாக ஆணையர் கடித எண் இஇ 2(2) /7540/ 2013, நாள் 08–02–2013.

**ஆணை: எண் 48, வருவாய் [பே.மே.3(1)]த் துறை, நாள் 2013 பிப்ரவரி 13.**

2012 ஆம் ஆண்டில் இயல்பாக தமிழகத்திற்கு கிடைக்கும் மழையளவான 920.9 மில்லி மீட்டரில் 711.9 மில்லி மீட்டர் மழை மட்டுமே கிடைக்கப்பெற்றுள்ளது. 2012 ஆம் ஆண்டு தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழைக் காலங்களில் சராசரி மழை 24 சதவீதம் மற்றும் 16 சதவீதம் குறைவாக பெறப்பட்டுள்ளது. இதன் காரணமாக சராசரி மழை அளவைக் காட்டிலும் 21 மாவட்டங்களில் 20 முதல் 42 சதவீதம் குறைவாக கிடைக்கப்பெற்றுள்ளது. போதிய பருவமழை பெய்யாததாலும், காவேரியிலிருந்து இடர்பாடு பங்கீட்டு முறையின்படி கர்நாடக மாநிலத்தினால் தண்ணீர் திறந்துவிடப்படாததாலும் நிலத்தடி நீர் மட்டம் குறைந்து தமிழகத்தில் வறட்சி ஏற்பட காரணமாக அமைந்தது. 20 சதவீதம் அளவிற்கே மழை குறைவு உள்ள மாவட்டங்களில் வடகிழக்கு பருவமழை சமச்சீராக இல்லாமல் இருந்ததால் விவசாயம் செய்யப்பட்ட பயிர்கள் பாதிக்கப்பட்டு பயிரிழப்பு ஏற்பட்டுள்ளதுடன், போதிய வேலைவாய்ப்பின்றி விவசாய தொழிலாளர்களும் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

(2) இந்தச் சூழ்நிலையில், தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை பொய்த்துவிட்டதன் காரணமாகவும், இடர்பாடு பங்கீட்டு முறையின்படி கர்நாடகம் தண்ணீர் திறந்துவிடாததன் காரணமாகவும், மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிடுவதில் தாமதம் ஏற்பட்டதோடு மட்டுமல்லாமல், முன்னதாகவே மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிடுவதும் நிறுத்தப்பட்டதால் காவேரி டெல்டா பகுதிகளில் பயிரிடப்பட்ட சம்பா / தாளடி நெற்பயிர்களின் கடைமடைப் பகுதிகளில் உள்ள பயிர்கள், தண்ணீர் இல்லாமை காரணமாக பாதிப்படைந்துள்ளது.

(3) மேலும் வரும் கோடையில் கடும் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படக்கூடிய வாய்ப்புள்ளது என நகராட்சி நிர்வாகம், பேரூராட்சி துறை, ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறைகள் கோடிட்டு காட்டியுள்ளன. இதுதவிர, மாநிலத்தில் குறிப்பாக காவேரி டெல்டா பகுதிகளில் கால்நடை பராமரிப்புத் துறை 100 லட்சம் மெட்ரிக் டன் அளவிற்கு பசுந்தீவனத்திற்கு (Green Fodder) தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்புள்ளது என்றும், மார்ச் 2013 முதல் உலர் தீவனத்திற்கும் (Dry Fodder) தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்புள்ளது எனவும் தெரிவித்துள்ளது.

(4) மாநிலத்தில் வறட்சியால் ஏற்பட்டுள்ள சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஒரு உயர்மட்டக் குழுவை அமைத்து வறட்சி நிலையை ஆய்வு செய்து பரிந்துரை அறிக்கையினை அரசுக்கு சமர்ப்பிக்க உத்தரவிட்டார். அதற்கிணங்க, பார்வை இரண்டில் கண்டுள்ள 5–1–2013–ம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 4–ல், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் தலைமையில் ஒரு உயர் மட்டக்குழு அமைத்து அரசு ஆணையிட்டது. மேற்கண்ட உயர்மட்டக் குழு 08–01–2013 அன்று கூட்டம் ஒன்றினை நடத்தி 10–01–2013 முதல் 12–01–2013 வரை காவிரி டெல்டா மாவட்டங்களான நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், அரியலூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகியவற்றில் கள ஆய்வு மேற்கொண்டது. உயர்மட்டக் குழு கடந்த 29–01–2013 அன்று கள ஆய்வு தொடர்பான விவரங்களை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு எடுத்துரைத்தனர். சராசரி மழையளவைவிட குறைவாக மழைபெறப்பட்டதாலும், காவேரியில் போதிய அளவு தண்ணீர் பெறப்படாததாலும், மாநிலத்தில் ஏற்பட்டுள்ள அசாதாரண வறட்சி நிலவரங்களை கருத்தில் கொண்டு பரிந்துரை அறிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு 31–01–2013 அன்று உயர்மட்டக் குழு சமர்ப்பித்தது.

(5) அரசு அமைத்த இந்த உயர்மட்டக் குழுவின் அறிக்கையின் அடிப்படையில் 08–02–2013 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மேதகு ஆளுநரின் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது நடைபெற்ற விவாதத்திற்கு பதிலளித்துப் பேசிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கீழ்கண்ட அறிவிப்புகளை வெளியிட்டார்.

(i) தமிழ்நாட்டில் சென்னை மாவட்டம் நீங்கலாக 31 மாவட்டங்களையும் வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களாக அறிவிக்கப்படுகிறது.

(ii) 50 விழுக்காட்டிற்கு மேல் மகசூல் பாதித்துள்ள 1 லட்சத்து 75 ஆயிரம் டெல்டா விவசாயிகளின் 3.61 லட்சம் ஏக்கர் பயிர்களுக்கு, ஏக்கர் ஒன்றுக்கு, 15,000 ரூபாய் என்ற வீதத்தில் நிவாரணத் தொகை வழங்கப்படும். அதாவது, பேரிடர் நிவாரணம், வேளாண் பயிர்க் காப்பீடு, மற்றும் சிறப்பு கூடுதல் நிவாரணம் என மொத்தமாக, ஏக்கர் ஒன்றுக்கு 15,000 ரூபாய் உடனடியாக விவசாயிகளுக்கு அரசால் வழங்கப்படும்.

(iii) காவேரி டெல்டா விவசாயிகள் அனைவருக்கும் தமிழக அரசே பயிர்க் காப்பீட்டுத் தொகையை செலுத்தியுள்ளதால், 50 விழுக்காட்டிற்கும் குறைவாக பயிரிழப்பு ஏற்பட்டுள்ள விவசாயிகளுக்கும், அந்தந்த பகுதிகளில் ஏற்பட்டுள்ள சராசரி பயிரிழப்புக்கு ஏற்ப, காப்பீட்டு நிவாரணம் வழங்கப்படும். காப்பீட்டு நிறுவனத்தின் அனுமதி கிடைக்கப் பெற்றவுடன், இந்த நிவாரணம் வழங்கப்படும்.

(iv) தேசிய ஊரக, வேலை உறுதித் திட்டத்தின்கீழ், 100 நாட்கள் பணி வரம்பு என்பது 150 நாட்களாக உயர்த்தப்படும்.

(v) தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை வாயிலாக, 181 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 15,000 பண்ணை குட்டைகள் டெல்டா மாவட்டங்களில் அமைக்கப்படும்.

(vi) இதர வேலைவாய்ப்புப் பணிகள், 1,336 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும். மொத்தத்தில், காவேரி டெல்டா பகுதியில் உள்ள விவசாயத் தொழிலாளர்கள், இந்தப் பணிகள் மூலம் 1,517 கோடி ரூபாய் அளவுக்கு ஊதியம் பெறுவர்.

(vii) வறட்சி காரணமாக ஏற்படும் கால்நடை தீவனப் பற்றாக்குறையை தீர்க்கும் வகையில், கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை வாயிலாக 5 கோடி ரூபாய்க்கு பசுந்தீவனம்; 15 கோடி ரூபாய்க்கு அடர் தீவனம்; 15 கோடி ரூபாய்க்கு உலர் தீவனம் மற்றும் 12 கோடியே 85 லட்சம் ரூபாய்க்கு பண்ணை குட்டைகளில் உள்நாட்டு மீன் வளர்ப்பு என 47 கோடியே 85 லட்சம் ரூபாய் மதிப்பிலான திட்டங்கள் மேற்கொள்ளப்படும்.

(viii) வறட்சி காரணமாக டெல்டா பகுதிகளில் ஏற்பட்டுள்ள குடிநீர்ப் பற்றாக் குறையை தீர்க்கும் வகையில், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மூலம் 7 கோடியே 2 லட்சம் ரூபாய்க்கு நீர் ஆதாரங்கள் மேம்படுத்துதல் மற்றும் குடிநீர் விநியோகத்தை மேம்படுத்துதல்; 18 கோடியே 3 லட்சம் ரூபாய்க்கு பேரூராட்சிகளில் குடிநீர் வழங்குதல்; மற்றும் 12 கோடியே 20 லட்சம் ரூபாய்க்கு நகராட்சிகளில் குடிநீர் வழங்கல் என 37 கோடியே 25 லட்சம் ரூபாய், மதிப்பிலான திட்டங்கள் மேற்கொள்ளப்படும்.

(ix) பொதுப் பணித் துறை மூலம் ஏரிகள் தூர் வாருதல்; குளங்கள் சீரமைத்தல் போன்ற பணிகளும் மேற்கொள்ளப்படும்.

(x) அனைத்து மாவட்டங்களிலும் விவசாயிகள் செலுத்த வேண்டிய நில வரி தள்ளுபடி செய்யப்படும்.

(xi) வறட்சி காரணமாக விவசாயிகள் தங்கள் கடனை திரும்பச் செலுத்துவதில் ஏற்பட்டுள்ள சிரமத்தினைக் கருத்தில் கொண்டு, விவசாயிகள் பெற்றுள்ள கூட்டுறவுக் கடன்கள் மாற்றி அமைக்கப்படும். அதாவது, reschedule செய்யப்படும்.

(xii) டெல்டா மாவட்டங்கள் நீங்கலாக, பிற மாவட்டங்களில் உள்ள 3 லட்சத்து 34 ஆயிரம் விவசாயத் தொழிலாளர்கள் பயன் பெறும் வகையில் தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் வேலை வாய்ப்பு அளிக்கப்படும். 100 நாட்கள் பணி வரம்பு என்பது, 150 நாட்களாக உயர்த்தப்படும்.

(xiii) மாநிலம் முழுவதற்குமான வறட்சி கோரிக்கை மனு, அதாவது Drought Memorandum தயார் செய்யப்பட்டு, நிவாரணம் கோரி மத்திய அரசுக்கு அனுப்பப்படும்.

(xiv) 9 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டு இருந்தாலும் அதற்கு பயிரிழப்பு காரணமில்லை. இருப்பினும், பல்வேறு காரணங்களால் தற்கொலை செய்து கொண்டுள்ள விவசாயிகளின் உயிரிழப்பினால் துயரம் அடைந்துள்ள அவர்தம் குடும்பத்தினரின் வறிய நிலைமையைக் கருத்தில் கொண்டு, இந்த 9 குடும்பத்தினருக்கும் தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்கப்படும்.

**(6)** உயர்மட்ட குழுவின் அறிக்கையின் அடிப்படையிலும் கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் அவர்களின் கருத்துருவின் அடிப்படையிலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேற்கண்ட அறிவிப்புகளை உடனடியாக நடைமுறைப்படுத்த கீழ்கண்டவாறு அரசு ஆணையிடுகிறது.

(i) மத்திய அரசின் பேரிடர் நிவாரண வரையறைபடி, நெற்பயிரை இழந்த சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு, 2,429 ரூபாய் மட்டுமே நிவாரணமாக வழங்க இயலும். மாநில பேரிடர் நிவாரண வரையறைபடி, ஏக்கர் ஒன்றுக்கு 4,000 ரூபாய் மட்டுமே நிவாரணமாக வழங்க இயலும். இருப்பினும் 4,000 ரூபாய் நிவாரணத் தொகை 5,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்று ஏற்கனவே அரசால் ஆணையிடப்பட்டுள்ளது, இதுவன்றி, பயிர் இழப்புக்காக காப்பீட்டு நிறுவனங்களிடமிருந்து ஏக்கர் ஒன்றுக்கு 8,692 ரூபாய் வரை பெற இயலும். இவ்வாறு, காப்பீட்டு நிவாரணத் தொகையை நிர்ணயம் செய்யும் போது 100 விழுக்காடு மகசூல் இழப்பு ஏற்பட்டால்தான், ஒரு ஏக்கருக்கு முழு காப்பீட்டுத் தொகையான ரூ.8,692 கிடைக்கும். மேலும், சோதனை அறுவடை செய்து முடிக்கப்பட்டு, காப்பீட்டு நிவாரணத் தொகை பெறுவதற்கு தாமதம் ஏற்படும். இதனைத் தவிர்க்கும் வகையில், 50 விழுக்காட்டிற்கும் மேல் மகசூல் இழப்பு ஏற்பட்டுள்ள விவசாயிகளுக்கு முழு காப்பீட்டு நிவாரணத் தொகையை முன்கூட்டியே தமிழக அரசு வழங்கி ஆணையிடுகிறது. இதன்படி, ஏக்கர் ஒன்றுக்கு, 15,000 ரூபாய் என்ற வீதத்தில் நிவாரணத் தொகை வழங்கப்படும். அதாவது, பேரிடர் நிவாரணம், வேளாண் பயிர்க் காப்பீடு, மற்றும் சிறப்பு கூடுதல் நிவாரணம் என மொத்தமாக, ஏக்கர் ஒன்றுக்கு 15,000 ரூபாய் உடனடியாக விவசாயிகளுக்கு அரசால் வழங்கப்படும்.

(ii) காவேரி டெல்டா பாசன பகுதிகளில் நெல் சாகுபடி செய்த விவசாயிகளில் 50 விழுக்காட்டிற்கும் மேல் மகசூல் இழப்பு ஏற்பட்டுள்ள விவசாயிகளுக்கு பேரிடர் நிவாரண நிதியிலிருந்து 5,000 ரூபாய் உள்பட பயிர் காப்பீட்டு நிவாரணம் மற்றும் காவேரி சிறப்பு கூடுதல் நிவாரணமாக மொத்தம் ஏக்கர் ஒன்றுக்கு 15,000 ரூபாய் வழங்கப்படும். இத்தொகையில் ஏக்கருக்கு 5,000 ரூபாய் வீதம் பயிர் இழப்பு நிவாரணமாக மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து மகசூல் பாதிக்கப்பட்ட 1 லட்சத்து 75 ஆயிரம் விவசாயிகள் பயன்பெறும் வகையில் 3.61 லட்சம் ஏக்கர் பயிர்களுக்கு, மொத்த நிவாரண தொகையாக 180 கோடியே 50 லட்சம் ரூபாய் கீழ்கண்ட தலைப்பின் கீழ் வழங்கப்படும்.

> "2245 இயற்கை சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு – 01 வறட்சி – 800 ஏனையச் செலவு – I திட்டத்தில் சேராதது – AF. வறட்சியின் காரணமாக பயிர் இழப்பிற்காக குறு, சிறு மற்றும் பெரு நில உழவர்களுக்கு நிவாரணத் தொகை – 09. உதவித் தொகை – 01. நடப்புச் செலவிற்கான உதவித் தொகை." (த.தொகு. 2245–01–800–AF.0915)"

(iii) மேற்கண்ட 5,000 ரூபாய் போக மீதமுள்ள 10,000 ரூபாய் முன் பணமாக, பயிர் காப்பீட்டு நிவாரண தொகையை எதிர்நோக்கி விவசாயிகளுக்கு முன்னதாகவே வழங்கப்படும். காப்பீட்டு நிறுவனங்களால் வழங்கப்படும் தொகை, காப்பீட்டு நிறுவனத்திடமிருந்து கிடைக்கப் பெற்றவுடன் ஈடு செய்துக்கொள்ளப்படும். தற்போது வழங்கப்படும் 10,000 ரூபாயில் காப்பீட்டு நிறுவனங்களால் வழங்கப்படும் தொகை போக எஞ்சிய தொகை "காவேரி சிறப்பு கூடுதல் நிவாரணமாக" அளிக்க உத்தரவிடப்படுகிறது.

(iv) தற்போது அறிவிக்கப்பட்டுள்ள இந்த 15,000 ரூபாய் அந்தந்த மாவட்ட ஆட்சித்தலைவர்கள் பெற்று மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலமாக தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்களுக்கும், பயிர்காப்பீட்டு கணக்கு பராமரிக்கும் வணிக வங்கிகளின் ஒருங்கிணைப்பு கிளைகளுக்கும் (Nodal Bank Branch) வழங்குவர். இத்தொகையை அந்த வங்கிகளால் சம்மந்தப்பட்ட வங்கிகள் பயன்பெற தகுதியென கண்டறியப்பட்டு விவசாயிகளின் வங்கி கணக்குகளின் மூலம் இத்தொகை வழங்கப்படும். இந்த நிவாரணத் தொகை ஏற்கனவே விவசாயிகள் பெற்றுள்ள பயிர் கடன் நிலுவை தொகையில் சரிசெய்யப்படக்கூடாது. பயிர் காப்பீட்டு நிவாரண தொகையை காப்பீட்டு நிறுவனத்திடமிருந்து விவசாயிகளின் வங்கி கணக்கில் பெறும் பட்சத்தில் அத்தொகையை விவசாயிகள் ஏற்கனவே அரசிடமிருந்து பெற்றுள்ள முன்பண கணக்கில் ஈடு செய்து கொள்ள ஏதுவாக ஒரு உறுதிப் பத்திரம் (undertaking) நிவாரணம் பெறும் விவசாயிகளிடமிருந்து பெறப்படவேண்டும். அதன்படி ஈடுசெய்யப்பட்ட பயிர் காப்பீட்டு நிவாரணத் தொகை, தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்களிடமிருந்தும், வணிக வங்கிகளிடமிருந்தும் மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலமாக மாவட்ட ஆட்சியர்களால் திரும்ப பெறப்பட்டு அரசுக்கு திரும்ப செலுத்தப்பட வேண்டும். ஈடு செய்யப்படும் பயிர் காப்பீட்டு நிவாரணத் தொகை போக மீதமுள்ள நிகர முன்பணத் தொகை **காவேரி சிறப்பு கூடுதல் நிவாரண தொகையாக ஈடு செய்துக்கொள்ளும் வகையில் உரிய ஆணை காப்பீட்டு நிறுவனம் வழங்கும் தொகையின் விவரங்களை முழுவதுமாக பெற்றப்பின்னர் வருவாய்த் துறையால் அரசாணை பிறப்பிக்கப்படும்.** மேற்படி முன்பணம் 3.61 லட்சம் ஏக்கருக்கு 10,000 ரூபாய் வீதம் மொத்தம் 361 கோடி ரூபாயும் தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்களுக்கும், வணிக வங்கிகளுக்கும், சேவைக் கட்டணமாக ஏக்கருக்கு ரூபாய் 15 வீதம் மொத்தம் ரூபாய் 54.15 இலட்ச ரூபாயும் கீழ்கண்ட தலைப்புகளின் கீழ் வழங்கப்படும்.

> "2401.00 பயிர் வளர்ப்பு – 110 பயிர்க் காப்புறுதி – பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – JI. தேசிய வேளாண் காப்புறுதி திட்டம் – 51. இழப்பீடு – 02 ஏனைய இழப்பீடுகள்".
>
> (த.தொகு. 2401 00 110 JI - 5124)

காப்பீட்டு நிறுவனத்திடமிருந்து பயிர் காப்பீட்டு நிவாரண தொகை கிடைக்கப்பெற்றவுடன் ஏற்கனவே வழங்கப்பட்ட முன்பணத்திற்கு ஈடு செய்யப்படும். அத்தொகை கீழ்கண்ட கணக்கில் மாவட்ட ஆட்சித் தலைவர்களால் செலுத்தப்பட வேண்டும்.

> "0401.00 பயிர் வளர்ப்பு – 800. ஏனைய வரவுகள் – BQ- வேளாண்மை காப்புறுதி திட்டத்தின் கீழ் காப்புறுதி நிறுவனங்களிடமிருந்து பெறப்படும்"
>
> வரவு. (த.தொகு. 0401 00 800 BQ - 0006)

(v) காவேரி டெல்டா பாசன பகுதிகளில் 50 விழுக்காட்டுக்கும் குறைவாக பயிர் இழப்பு ஏற்பட்டுள்ள விவசாயிகளுக்கு அந்தந்த பகுதிகளில் ஏற்பட்டுள்ள சராசரி பயிர் இழப்புக்கு ஏற்ப காப்பீட்டு நிறுவனம் மூலம் நிவாரணம் வழங்கப்படும். இதற்குரிய மாநில அரசின்

பங்கினை வேளாண்மைத் துறை பெற்று காப்பீட்டு நிறுவனங்களுக்கு வழங்கும். பயிர்காப்பீட்டுத் திட்டத்தில் விரைவாக நிவாரணம் வழங்கும்பொருட்டு, பயிர் அறுவடை சோதனை மதிப்பீட்டினை (Crop cutting experiments) விரைவாக செய்து முடிக்க வேளாண்மைத் துறை நடவடிக்கை எடுக்கும்.

(vi) தமிழகத்தில் தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவ மழை இயல்பான அளவு பெறப்படாததால் வானிலை சூழ்நிலை காரணமாக ஏற்படும் வறட்சியும் (Meteorological Drought), கர்நாடக மாநிலத்தினால் இடர்பாட்டு பங்கீட்டு முறையின்படி காவேரியிலிருந்து தண்ணீர் திறந்து விடப்படாததால், நீர்பாசன அணைகளிலும், குடிநீர் தேக்கங்களிலும், தண்ணீர் இன்மையால் நீரின்மை காரணமாக ஏற்படும் வறட்சியும் (Hydrological Drought) ஏற்பட்டுள்ளது. மேற்கண்ட இரண்டு காரணங்களினால் ஏற்பட்ட வறட்சியினை தொடர்ந்து, டெல்டா மற்றும் டெல்டா அல்லாத மாவட்டங்களில், விவசாய நிலங்களுக்கு போதுமான பாசன நீர் இல்லாமல் பயிர்கள் வாடும் நிலை ஏற்பட்டு வேளாண்மையிலும் வறட்சி (Agricultural Drought) ஏற்பட்டுள்ளது. இந்த அசாதாரனமான வறட்சி நிலையை கருத்தில் கொண்டு சென்னை நீங்கலாக ஏனைய 31 மாவட்டங்களும் வறட்சி மாவட்டங்களாக அரசால் அறிவிக்கப்படுகிறது. இதன் தொடர்ச்சியாக உரிய வறட்சி நிவாரண பணிகள் இந்த மாவட்டங்களில் மேற்கொள்ளப்படும்.

(vii) வறட்சி மாவட்டங்களாக அறிவிக்கப்பட்ட 31 மாவட்டங்களிலும் நிலவரி முழுமையாக தள்ளுபடி செய்யப்படுகிறது.

(viii) தமிழ்நாட்டில் வறட்சி மாவட்டங்களாக அறிவிக்கப்பட்டுள்ள 31 மாவட்டங்களிலும் விவசாய ஊரக வேலை உறுதி அளிப்பு திட்டத்தின் கீழ் தற்போதுள்ள 100 நாட்கள் என்ற பணி வரம்பு 150 நாட்களாக உயர்த்தப்படுகிறது.

(ix) காவேரி பாசன பகுதிகளில் உரிய வேலைவாய்ப்பை ஏற்படுத்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தின்கீழ் 181 கோடி மதிப்பீட்டில் 15 ஆயிரம் பண்ணை குட்டைகள் அமைக்க அரசு ஆணையிடுகிறது.

(x) இது தவிர, இதர வேலை வாய்ப்பு பணிகள் மூலம் 1336 கோடி மதிப்பீட்டில் காவேரி டெல்டா பகுதியில் உள்ள விவசாய தொழிலாளர்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்படும். இதனால் காவேரி பாசன பகுதியில் தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின்கீழ் மொத்தமாக 1517 கோடி ரூபாய் அளவிற்கு பணிகள் மேற்கொள்ள உத்தரவிடப்படுகிறது.

(xi) இதுவன்றி, பொதுப்பணித் துறை மூலமாக ஏரியில் தூர் வாருதல், குளங்கள் சீரமைத்தல் போன்ற பணிகளை துரிதமாக மேற்கொள்ளவும் அரசு ஆணையிடுகிறது.

(xii) வறட்சி காரணமாக ஏற்படும் கால்நடை தீவனப் பற்றாக்குறையை தீர்க்கும் வகையில், கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை வாயிலாக 5 கோடி ரூபாய்க்கு பசுந்தீவனம்; 15 கோடி ரூபாய்க்கு அடர் தீவனம்; 15 கோடி ரூபாய்க்கு உலர் தீவனம் மற்றும் 12 கோடியே 85 லட்சம் ரூபாய்க்கு பண்ணைக் குட்டைகளில் உள்நாட்டு மீன் வளர்ப்பு என 47 கோடியே 85 லட்சம் ரூபாய் மதிப்பிலான திட்டங்கள் மேற்கொள்ள உத்தரவிடப்படுகிறது. இப்பணிகளுக்கு தற்போது செயல்பட்டு வரும் பல்வேறு திட்டங்கள் மூலமாக 17.85 கோடி நிதி பயன்படுத்திக் கொள்ளவும், அடர் தீவனம் வழங்குவதற்குத் தேவைப்படும் 15 கோடியும், உலர் தீவனம் வழங்குவதற்கு தேவைப்படும் 15 கோடியும் ஆக மொத்தம் 30 கோடி ரூபாய் மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து கீழ்கண்ட தலைப்பின் கீழ் வழங்கப்படவும் அரசு ஆணையிடுகிறது.

> "2245 – இயற்கை சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு – 01. வறட்சி 104 – தீவனங்கள் வழங்குதல் – I திட்டத்தில் சேராதது. AA. வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு தீவனங்கள் வாங்கி வழங்குதல். – 09 உதவித்தொகை 01 நடப்பு செலவுக்கான உதவித் தொகை." (த.தொகு. 2245.01.104- AA - 0911)"

(xiii) வறட்சி காரணமாக டெல்டா பகுதிகளில் ஏற்பட்டுள்ள குடிநீர்ப் பற்றாக்குறையை தீர்க்கும் வகையில், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மூலம் 7 கோடியே 2 லட்சம் ரூபாய்க்கு நீர் ஆதாரங்கள் மேம்படுத்துதல் மற்றும் குடிநீர் விநியோகத்தை மேம்படுத்துதல், 18 கோடியே 3 லட்சம் ரூபாய்க்கு பேரூராட்சிகளில் குடிநீர் வழங்குதல், மற்றும் 12 கோடியே 20 லட்சம் ரூபாய்க்கு நகராட்சிகளில் குடிநீர் வழங்கல் என 37 கோடியே 25 லட்சம் ரூபாய், மதிப்பிலான திட்டங்கள் மேற்கொள்ள உத்தரவிடப்படுகிறது. இதற்கென தேவைப்படும் 37.25 கோடி ரூபாய் மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து கீழ்கண்ட தலைப்பின் கீழ் வழங்க ஆணையிடப்படுகிறது.

> "245 – இயற்கை சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு – 01. வறட்சி –102 – குடிநீர்வழங்குதல் – I திட்டத்தில் சேராதது. AK. குடிநீர் பற்றாக்குறை தணிப்பதற்காக தமிழ்நாடு குடிநீர்வழங்கல் – வடிகால் வாரியத்திற்காக மானியங்கள் வழங்குதல் – 09. உதவித் தொகை – 01. நடப்புச் செலவுக்கான உதவித் தொகை." (த.தொகு. 2245.01.102. AK - 0915)"

**(xiv) வறட்சி காரணமாக விவசாயிகள் தங்கள் கடனை திரும்ப செலுத்துவதில் உள்ள சிரமத்தினைக் கருத்தில் கொண்டு, விவசாயிகள் பெற்றுள்ள கூட்டுறவுக் கடன்கள் மாற்றி அமைக்கப்படும். அதாவது reschedule செய்யப்படும். இதற்கான உரிய ஆணை கூட்டுறவுத் துறை மூலமாக தனியாக வெளியிடப்படும்.**

(xv) மாநிலம் முழுவதும் ஏற்பட்டுள்ள கடுமையான வறட்சியை கருத்தில் கொண்டு உரிய வறட்சி நிவாரண கோரிக்கை மனுவை (Drought Memorandum) விரைவில் தயார் செய்து மத்திய அரசுக்கு அனுப்ப வருவாய்த் துறை உரிய நடவடிக்கை மேற்கொள்ளும்.

(7) மேற்கண்ட சிறப்பு நிவாரணத் திட்டத்தினை செயல்படுத்திட கூடுதல் தலைமைச் செயலர்/ வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாநில நிவாரண ஆணையர் கண்காணிப்பு அலுவலராக (Nodal Officer) நியமனம் செய்யப்படுகிறார். மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் துறைத் தலைவர்கள் மேற்கண்ட திட்டத்தினை செயல்படுத்துவதில் ஏற்பட்ட முன்னேற்றம் தொடர்பாக அறிக்கை அனுப்புவதற்கென படிவங்களை வடிவமைத்து அவ்வறிக்கைகளை இருவாரத்திற்கு ஒருமுறை தொகுத்து அரசுக்கு ஆய்விற்கென அனுப்ப கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(8) பார்வை 4–ல் கண்ட அரசாணையின்படி நியமனம் செய்யப்பட்ட கண்காணிப்பு அதிகாரிகள் (Monitoring Officers) பாதிக்கப்பட்ட மாவட்டங்களை மாதத்திற்கு ஒருமுறை ஆய்வு செய்து இவ்வரசாணையில் வெளியிடப்பட்டுள்ள அறிவிப்புகளின் அடிப்படையில் விவசாயிகள் மற்றும் விவசாய தொழிலாளர்களுக்கு நிவாரணம் வழங்கப்படுவது உறுதி செய்ய வேண்டும். இது தொடர்பாக மாதாந்திர அறிக்கையினை பிப்ரவரி 2013 முதல் அரசுக்கு அளிக்க வேண்டும். பரிந்துரைக்கப்படும் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தவும் களப் பணிகளின் முன்னேற்றம் குறித்து ஆய்வுகள் மேற்கொண்டும் நிவாரண திட்டங்கள் வேகமாக நடைபெற ஆவன செய்ய வேண்டும்.

(9) மேலே ஒப்பளிக்கப்பட்ட செலவினங்களை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம், வரும் 2012–2013–ஆம் ஆண்டு இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இதனை எதிர்நோக்கி செலவினங்களை மேற்கொள்ள உரிய அலுவலர்களுக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது. இச்செலவினம் குறித்து, சட்டமன்றத்தின் சிறப்பு கவனத்திற்கு கொண்டு வரும் பொருட்டு, இது குறித்து, 2012–2013–ஆம் ஆண்டு துணை மானிய கோரிக்கையில் சேர்க்கவும் 2012–2013–ஆம் ஆண்டு இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் இச்செலவினை சேர்க்க உரிய கருத்துருவினை நிதித் துறைக்கு அனுப்புமாறும் உரிய அலுவலர்கள் கோரப்படுகின்றனர்.

(10) இவ்வரசாணை நிதித் துறையின் அ.சா.கு.எண் 53/DS(Revenue)/2013, நாள் 13–02–2013–ல் பெற்ற இசைவுடனும், கூடுதல் நிதி ஒதுக்க பேரேடு எண் 2315 (இரண்டாயிரத்து முன்னூற்று பதினைந்து)வுடனும் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ஷீலா பாலகிருஷ்ணன்,**
*தலைமைச் செயலாளர்.*

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, CHENNAI
ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU